1981 ஆகஸ்ட் 24]

னையும் மக்கள் வாங்குகின்ற நிலையில் மக்கள் அதிர்ஷ்டத்தைச் சோதிப்பதற்காக, அதிர்ஷ்டம் இருக்கிறதா இல்லையா என்பதைச் சோதிப்பதற்காக வாங்கிக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. பத்திரிகைகள் எல்லாம்கூட ராசி பலனுக்கு ஒரு பக்கத்தை ஒதுக்கி மேஷம், ரிஷபம், துலாம் என்றெல்லாம் பார்த்து அந்தந்த மாதத்திலே தங்கள் அதிர்ஷ்டத்தைச் சோதித்துப் பார்க்கிறார்கள். அவர்களுக்கு அதிர்ஷ்டம் இருக்கிறதோ இல்லையோ, அரசுகளுக்கு அதிர்ஷ்டம் இருக்கிறது என்ற வகையில் வரவேற்கும் தன்மையில் இருக்கிறோம்.

[முற்பகல் 9-10]

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இந்த பரிசுச் சீட்டுகள் கள்ளத்தனமாக அச்சடிக்கப்படுகிறது என்ற புகார் கடந்த சில மாதங்களாக இருப்பது குறித்து அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதைத் தடுக்க அரசு நடவடிக்கை ஏதாவது எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கள்ளத் தனமாக அச்சடித்து விற்பனை செய்வதாகக் குறிப்பு எதுவும் வரவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுகிறபோது தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறோம். பரிசுச் சீட்டுகளை அவர்கள் 10, 15 என்று ஒன்றாகச் சேர்த்து நம்பர் கொடுத்து அதையும் விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற தகவல் வந்து அதன்மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று உரிய துறையினர் கேட்டுக் கொள்ளப் பட்டு இருக்கிறார்கள்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இராயபுரம் மீன்பிடி துறைமுகம்

வினா எண் 23— திரு. செ. சிவசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் மீன்பிடி துறைமுகம் கட்டி முடிக்கப் படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) 1981-ம் ஆண்டிற்குள் எல்லா வேலைகளும் முடிக்கப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.